பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*03 09 2026* *THURSDAY* *7.15 AM*
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திர மோடியும், பெல்ஜியம் பிரதமர் திரு. *Bart De Wever*-ம் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர்.
2. நாட்டு மக்களின் சுகாதாரம், வாழ்வாதாரம் ஆகியவற்றிற்காக சேவையாற்றும் பொறுப்பு மருத்துவப்பட்டம் பெறும் மாணவர்களுக்கு உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
3. பீகாரில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் பாஹல்பூர், சமஸ்திபூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
4. யுக்ரைன் விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புடினுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு.டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.
5. ஆசியக்கோப்பை மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது..

<<<<>>>>

பிரதமர் திரு.நரேந்திர மோடியும், பெல்ஜியம் பிரதமர் திரு. *Bart De Wever*-ம் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபடுகின்றனர்.

பிராந்தியம் மற்றும் பரஸ்பரம் நலன் சார்ந்த உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

இந்தியாவில் 3 நாள் அரசுமுறை பயணமாக பெல்ஜியம் பிரதமர் நேற்று இரவு புதுதில்லி வந்தடைந்தார்.

அவருடன் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. *Theo Francken*-ம் வருகை தந்துள்ளார்.

இப்பயணத்தின் போது, இந்தியத் தொழில்துறை வர்த்தக கூட்டமைப்பின் கூட்டத்திலும், பெல்ஜியம் பிரதமர் உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டு மக்களின் சுகாதாரம், வாழ்வாதாரம் ஆகியவற்றிற்காக சேவையாற்றும் பொறுப்பு மருத்துவப்பட்டம் பெறும் மாணவர்களுக்கு உள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சத்திஸ்கர் மாநிலம் ராய்பூரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனை தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழா என்பது வெறும் கொண்டாட்டத்திற்கான தருணம் மட்டுமின்றி பொறுப்புணர்வுக்கான தருணம் என்றும் அவர் கூறினார்.

ராய்பூரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் வளர்ச்சி, சத்திஸ்கரில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை பிரதிபலிப்பதாக குறிப்பிட்டார்.

அம்மாநிலம் கடந்தகால சூழல்களிலிருந்து விடுபட்டு தற்போது முன்னேற்றம் அடைந்து வருவதாக திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் 14 வயதுடைய வளர் இளம் பெண்களுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்கான தடுப்பூசி செலுத்தும் முகாம் இன்று தொடங்குகிறது.

மாநிலத்தில் உள்ள 75 மாவட்டங்களிலும் இம்முகாம், இம்மாதம் 17-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

சுமார் 10 லட்சம் 14 வயதுடைய வளர் இளம் பெண்களுக்கு இந்த தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயித்துள்ளது.

எனவே, தகுதி உடையவர்கள் இம்முகாமில் கலந்துகொண்டு கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்கான தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு லக்னோ முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் என் பி சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நேபாள பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 250 ஆக அதிகரித்துள்ளது.

போதேகோஷி ஆற்றின் அருகே உள்ள சுரங்கங்களிலும், நிலத்தடி மின்நிலையங்களிலும் சிக்கியிருப்பவர்களை கண்டறிய மீட்பு குழுவினர் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேபாள ராணுவத்தினர் உட்பட கூட்டுப்பாதுகாப்பு படையினர் இதுவரை சுமார் 12 ஆயிரம் பேரை மீட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் 21 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

அங்குள்ள நீர்மின் நிலையப் பகுதிகளில், மீட்பு பணிகளில் இந்தியா, சீனா, தென்கொரியாவை சேர்ந்த நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் தொகை பெருக்கம், எதிர்கால நீர்தேவை உள்ளிட்ட சவால்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் மத்திய நீர்வள அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த நீர் தொடர்பான தேசிய அளவிலான துறைசார் உச்சிமாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

உச்சிமாநாட்டின் மூலம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயல்திட்டங்களை பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நீர் சேமிப்பில் மக்களின் பங்களிப்பு குறித்து வலியுறுத்திய பிரதமர், நீர் திருவிழா திட்டத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று பரிந்துரைத்தார்.

நீர்நிலைகளில் தூர்வாரும் பணியை வழக்கமான திட்டமாக மாற்றுவதற்கு ஏற்ற நடைமுறைகளை உருவாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

அணை பாதுகாப்பு குறித்து குறிப்பிட்ட பிரதமர், ஆண்டுதோறும் பருவமழைக்கு முன்பாக ஆயத்தப்பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டுமென்றும் அதை பாடத்திட்டங்களில் சேர்ப்பதன் மூலம் பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறினார்.

அத்துடன் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் நீர் மேலாண்மை மற்றும் அதன் நிர்வாகம் குறித்த திறனை வலுப்படுத்த வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

சுத்திகரிக்கப்பட்ட நீரை வேளாண் மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதன் வாயிலாக தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் வலியுறுத்தினார்.

நீர் சேமிப்பிற்கு தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் திறன்மிக்க தீர்வுகளை உருவாக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

அதை விரிவுபடுத்தும் வகையில் உலக அளவில் சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்த கண்காட்சிகளையும், பயிலரங்குகளையும் நடத்த வேண்டுமென்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

பீகாரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சோன் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் பீகாரின் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு பகுதிகள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன.

கங்கை ஆற்றிலிருந்து வெளியேறிய வெள்ளநீர் பாஹல்பூர், சமஸ்திபூர், பாட்னா, ககாரியா, பக்சார், பூஜ்பூர், வைஷாலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் தாழ்வான பகுதிகளை சூழ்ந்துள்ளது.

இதற்கிடையே பாட்னாவில் உள்ள அனைத்து முக்கிய படித்துறைகளிலும், கங்கை ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மனேர், திகா படித்துறை, காந்தி படித்துறை மற்றும் ஹதிதா ஆகிய பகுதிகளில் நீர்மட்டம் அபாய எல்லையை தாண்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

யுக்ரைன் விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புடினுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு.டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

யுக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் அமைதி ஒப்பந்தத்திற்கான முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டால் தாம் அந்நாட்டு அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ரஷ்யா-யுக்ரைன் ஆகிய இருநாடுகளுடனும், நல்லுறவை கடைபிடிக்க அமெரிக்கா விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

இவை வர்த்தகத்திற்கு நன்மை ஏற்படுத்தும் என்று திரு.டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*ஆசியக்கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.*

*துபாயில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

*<<<<>>>>*

*20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று போட்டியில் இந்தியா இன்று உஸ்பெகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.*

*<<<<>>>>*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் – சீனாவின் Jie Cui இணை காலிதிறுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்த இணை 7-5, 6-3 என்ற செட் கணக்கில் சீன இணையை வென்றது.*

*மகளிர் சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெறும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்துள்ளது.*

*இப்போட்டி இலங்கையில் நடைபெறுவதாக இருந்த நிலையில், அங்கு நிலவும் நிர்வாக விவகாரங்கள் காரணமாக போட்டி இந்தியாவுக்கு மாற்றப்படுவதாக தெரிவித்துள்ளது.*

*இப்போட்டி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் மும்பை மற்றும் வதோதராவில் நடைபெற உள்ளது.*

*<<<<>>>>*

*துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தென்மண்டல அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*பெங்ளுருவில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தின் நான்காவது மற்றும் இறுதி நாளான நேற்று 7 விக்கெட் இழப்பிற்கு 256 ரன் என்ற முந்தைய நாள் ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய வடக்கு மண்டலம், 297 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.*

*இதையடுத்து, 181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்மண்டல அணி 3 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்து வெற்றி பெற்றது.*

*முதல் இன்னிங்ஸில் தென் மண்டல அணி 312 ரன்னும், வடக்கு மண்டல அணி 198 ரன்னும் எடுத்தனர்.*

*சென்னையில் வரும் 6 ஆம் தேதி நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் தென் மண்டல அணி, கிழக்கு மண்டல அணியை எதிர்கொள்கிறது.*

*<<<<>>>>*